# ஐக்கியம் என்னும் தளத்தில் நின்று



# வெற்றி வரை போராடுவோம்!



## மன்னிக்க முடியாது
## தண்டனை
## வழங்குங்கள்

நமது தந்தையர் நாட்டுமண்மீது
சிவப்பு ரத்தத்தைச்
சிதற வைத்தவர்களுக்குத்
தண்டனை அளியுங்கள்

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்தத் துரோகிகளுக்குத்
தண்டனை அளியுங்கள்!


இங்கேயே...

இப்பொழுதே...

திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்

அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண்முன்னே
நிறைவேற்றுங்கள்.

—பாப்லோ நெருடா



# ஐக்கியம் என்னும் தளத்தில் நின்று வெற்றிவரை போராடுவோம்

ஈழ முழக்கம், செந்தணல், ஈழச்செய்தி
ஏடுகளில் வந்த ஆக்கங்கள் சிலவற்றின்
திருத்தப்பட்ட தொகுப்பே இந்த வெளியீடு

வெளியீடு.
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு
நிலையம்
1985

முதல் பதிப்பு—மார்ச் 1985

***உள் அட்டையில் :***

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் பாசறையொன்றில் இராணுவக்கல்வி கற்பதில் ஈடுபட்டுள்ள தோழர்கள்.

மக்கள் விடுதலைப் படையின் வலிமைக்குச் சான்று பகரும் சில இராணுவ நடவடிக்கைகள்: மட்டுநகர் சிறை உடைப்பு, சி.ஐ.ஏ உளவாளிகள் கடத்தல், காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல், கிளிநொச்சி இராணுவ பொலிஸ் கூட்டு முகாம்தாக்குதல், மட்டகளப்பு காரைத்தீவில் சிறீலங்கா காமாண்டோ படையினர்மீது தாக்குதல்.

தொடர்புகட்கு!
EPIC
P.O. BOX 5551
MADRAS-94

***இலண்டன் கிளை***
B.M.BOX. 1738
LONDON WCI N 3XX

## சி. ஐ. ஏ. உளவாளிகள் கடத்தல்!
## ஒரு சர்வதேசிய வெற்றி

"சி.ஐ. ஏயை எதிர்த்து முறியடிப்பது எவ்வாறு என்பதை எங்கள் மக்கள் கற்றுக் கொண்டுள்ளனர். சி. ஐ.ஏ யின் மற்றும் எங்கள் எதிரிகளின் சதித்திட்டங்களைக் கண்டு பிடித்து அம்பலப்படுத்துவதிலும் அவர்கள் அனுபவம் பெற்றுள்ளனர்."

- தோழர் பிடெல் காஸ்ரோ

எமது தலைமைக் கட்சியான **ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்** ஆயுதப் படையான **மக்கள் விடுதலைப் படையினர் சி. ஐ. ஏ.** என சுருக்கமாகக்குறிப்பிடப்படும் மத்திய புலனாய்வு நிறுவனத்தின் இரு உளவாளிகளைக் கடத்தினர். இந்த நிகழ்வானது ஈழ தேச விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச குணாம்சத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தேச விடுதலைக்காக மட்டுமன்றி சமூக பொருளாதார விடுதலைக்காகவும் போராடும் ஈழ மக்கள் சர்வதேச புரட்சிகர படை வரிசையின் ஒரு பிரிவினர் என்பது உலகெங்கும் உணர வைக்கப்பட்டுள்ளது.

ஈழப் புரட்சி வாதிகளின் மனிதத்துவ உணர்வுகளையும், ஈழ விடுதலைப் புரட்சியின் நியாய பூர்வமான தன்மையையும் சர்வ தேசமெங்கும் பிரகடனப் படுத்தும் நிகழ்

வாக சி. ஐ. ஏ. உளவாளிகள் கடத்தப்பட்டது அமைந்துள்ளது.

சர்வதேச புரட்சிவாதிகள் விடுதலை, எழிலான வாழ்வு என்பவற்றுக்காக மக்களை நேசித்து, மக்களுடன் வாழ்ந்து போராடும் மாமனிதர்கள் என்பதை ஏற்கனவே எமக்கு முன் உள்ள புரட்சிவாதிகளின் மகத்துவமிக்க வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன, இப்போது ஈழப் புரட்சிவாதிகள் என்றால் யார் என்ற வினாவுக்கு நடைமுறை மூலம் விடையளித்திருக்கின்றோம். ஆனால் இது ஆரம்பம் மட்டுமே. தொடரப் போகும் புரட்சிவாதிகளினதும் அவர்களது தலைமையிலான ஈழமக்களதும் வரலாற்றுப் படைப்பாக்கச் செயல் முறையில் இது ஆரம்பம் மட்டுமே. ஆனாலும் இது மிகவும் சிறப்பான ஆரம்பங்களில் ஒன்றாகும்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆலோசகர்கள் என்ற போர்வையில் பலவருடங்களாக ஈழத்தில் நடமாடிய இந்த இரு உளவாளிகளும் அப்பாவிகள் என அறிக்கை விட்டவர்களையும் இவர்களது பின்னணியில் உள்ள சக்தி பற்றியும் ஈழ மக்கள் மட்டுமன்றி முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் அறிந்து கொள்ளும் வாய்ப்பையும் இந்த சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

சமூக, பொருளாதார ஆய்வு, இராணுவ ஆலோசகர்கள், அபிவிருத்திகளுக்கான திட்டம் தீட்டும் நிபுணர்கள் உல்லாச பயணிகள் என்னும் பல விதமான வழிகளில் சி.ஐ. ஏ. தனது உளவு வேலைகளை நடத்தி வருவது உலகமறிந்த செய்தியாகும்.

உலகில் சோஷலிச திசை வழியைக் கொண்டே தேசிய ஜனநாயக அரசுகளைக் குழிபறித்து முறியடிக்கவும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. பல சதி வேலைகளை மேற்கொண்டு வருகின்றது. இது மட்டுமன்றி தேச விடுதலைக்காக போராடும்



தத்துவார்த்த தெளிவற்ற துணிச்சல்வாத தன்மையுடைய இயக்கங்கள் மத்தியில் ஊடுருவி இந்த இயக்கங்களது துணிச்சல்வாத, அதி தீவிரத்தனங்களுக்கு ஊக்கமளித்து இதன் மூலம் புரட்சி எழுச்சிகளைத் தடுத்துவிடவும் சி.ஐ.ஏ. முயன்று வருகிறது. இந்த இயக்கங்களில் உள்ள நபர்களை விலைக்கு வாங்கி புரட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை கூர்மைப் படுத்தும் குழி பறிப்பு வேலைகள் சி. ஐ. ஏ. யினால் பல நாடுகளில் நடைபெற்றுள்ளது.

சிறீலங்கா அரசுக்கு இராணுவ, பொருளாதார ஆலோசனைகளையும், பொருள் உதவிகளையும் தாராளமாக வழங்கி அதன் அழித்தொழிப்பு பலத்தை அதிகரிக்கும் அமெரிக்கா ஈழ மக்களுக்கு குடிநீர் வழங்க தனது நிபுணர்களை அனுப்பி வைக்கிறதாம்.

வியட்னாம் மக்களுக்கு எதிரான கொலை பாதகப் போரில் விசக் குண்டுகளை வீசிய அமெரிக்கா, தற்போது விடுதலைக்காக போராடும் மத்திய அமெரிக்கா மக்கள்மீது தனது இராணுவ மேலாண்மையை செலுத்தி வரும் அமெரிக்கா, விடுதலை வேண்டி போராடும் எல்சல்வடோர் மக்களில் இதுவரை 40 ஆயிரம் பேரை தனது ஏவல் நாய்கள் மூலம் வேட்டையாடி மகிழும் கொடிய ஏகாதிபத்திய அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் போராடும் ஈழ மக்களுக்கு தாகம் தணிக்க குடிநீர் வழங்க ஆலோசகர்களை அனுப்பி உதவுகின்றதாம். இந்த ஆலோசகர்கள் மிகவும் நல்லவர்களாம், அப்பாவிகளாம்.

மக்கள் விடுதலைப் படையால் கடத்தப்பட்ட இரண்டு சி. ஐ. ஏ. உளவாளிகளும் பல மாதமாக ஈழத்தின் பகுதிகளுக்கு ஆய்வு எனச் சென்று பிரதேச அமைப்புகளை புகைப்படம் எடுத்தனர். பின் சிறீலங்கா கூலிப்படை புக முடியாத பகுதிகளை ஆய்வு செய்த பின் சீறீலங்கா அரசுக்கு இராணுவ ஆலோசனைகளை வழங்கினர்.

இவர்கள் வந்து சென்று புகைப்படம் எடுத்துச்சென்ற பகுதிகளில் சிறீலங்கா கூலிப்படை புகுந்து சுற்றி வளைப்பு நடத்தி தேடுதல் வேட்டை நிகழ்த்தியது.

யுத்த நெருப்பை மூட்டி உலக மக்களை தனது ஏகாதிபத்திய நலனுக்காக தீய்த்து விடவும் தீர்மானித்துள்ள அமெரிக்காவுக்கு ஏனைய நாடுகளை அபிவிருத்தி செய்து உலக மக்களை சமாதானத்துடன் வாழவைக்கும் நல்ல நண்பன் என நாமம் சூட்டும் ஏகாதிபத்திய விசுவாச அடிமைகளை ஈழ மக்கள் இனம் கண்டு வருகின்றனர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (E.P.R.L.F.) அதன் வெகு ஜன அமைப்புகளும் ஈழ மக்களிடம் இதுவரை நடத்திய பொறுமையானதும், பிடிவாதமானதுமான அரசியல், ஸ்தாபன வேலைகளின் வலிமையை எதிரிப்படைகளால் துளைத்துவிட முடியவில்லை. சிறீலங்கா கூலிப்படைகளின் குவிந்த தேடுதல் வேட்டையின் மத்தியிலும் தனது உளவாளிகளைத் தேடுவதற்காக நேரடியாகவே அதிரடிப்படை என்னும் போர்வையில் வந்த சி.ஐ.ஏ. உளவாளிக் கும்பல் இடையேயும் மக்களைச் சார்ந்து நின்று. மக்கள் விடுதலைப்படை (P. L. A.) இக்கடத்தல் சம்பவத்தை வெற்றியாக நிறைவேற்றியுள்ளது.

உருக்குறுதி வாய்ந்த புரட்சிகர அமைப்பும், அதனைச் சுற்றி அணி திரளும் வெகு மக்கள் சக்தியும் பகைவனால் நெருங்க முடியாத வலிமையான கோட்டைகளாகும்.

மக்கள் விடுதலைப் படையின் இப்புரட்சிகர நடவடிக்கையில் பெண் தோழர்களும் பங்கு கொண்டுள்ளதானது எதிர்காலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈழப் பெண்களின் பங்களிப்பின் சிறப்பு மிகு தொடக்கமாகும்.

***ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***
***நீடூழி வாழ்க !***

***ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களையும்***
***தோற்கடிப்போம் !***

—செந்தணல் ***1984***

## ஐக்கிய முன்னணியை வலுவாக்கி வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவோம்

சிறீலங்காவின் ஆயுதமேந்தியகூலிப்படைகளால் ஒன்று இரண்டு, ஐந்து பத்தாகக் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்டுவந்த ஈழ மக்கள் இன்று அன்றாடம் ஐம்பது நூறாகப் படுகொலை செய்யப்படும் அளவுக்கு ***இலங்கைத் தீவில் பேரினவாதத் தீ பற்றி எரிகிறது......***

சிறீலங்கா நவ பாசிச அரசின் ஆயுதப் படைகளின் கொலை வெறியாட்டம் ஈழ மண்ணையே சுடுகாடாக்கிக் கொண்டிருக்கிறது. வல்வெட்டித்துறை, மன்னார் போன்ற எமது நகரங்கள் ஆக்கிரமிப்புப் படைகளால் எரியூட்டப்பட்டு அவற்றின் எழில்கள் சிதைக்கப்பட்டிருக்கின்றன: இப்போது ஈழத்தின் பல கிராமங்கள் இனவெறி கொண்டகூலிப்பட்டாளங்களால்சுற்றிவளைத்துகொளுத்தப்படுகின்றன, தாக்கப்படுகின்றன. ஈழத்து மண்ணிலேயே ஈழமக்கள் வாழ்விடங்கள் சிதைக்கப்பட்டும் எதிர்ப்புரட்சி வன்முறையாளர்களால், அகதிகளாக்கப்பட்டும் கல்லூரிகளிலும், கோவில்களிலும், பாதுகாப்பற்ற நிலையில் தங்கியிருக்கின்றனர்.

ஆக்கிரமிப்புப் படைகளின் குரூர வெறியாட்டங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தமது நகரம்,

கிராமங்களை விட்டு வயல்களிலும், காடுகளிலும் வாழ வேண்டிய அநாதரவான நிலையில் ஈழ மக்களின் எதிர்காலம் சின்னாபின்னாமாக்கப்படுகிறது.

சிறீலங்காவின் கூலிப்பட்டாளங்கள் மீதோ அல்லது இவர்களின் எந்தவொரு படைப்பிரிவின் மீதோ எந்த ஒரு தாக்குதல் ஏற்பட்டாலும் அதற்கு மறு தாக்குதலாக, பழி வாங்கும் நடவடிக்கையாக அப்பாவி மக்கள், சின்னஞ்சிறார்கள், பாடசாலை மாணவர்கள், முதியோர்கள், எந்தவித வேறு பாடுமின்றி கொலைப் பட்டாளங்களால் வேட்டையாடப்படுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஈழ வாலிபர்கள் எதிரிப்படைகளால் கைது செய்யப்பட்டு பல மைல்களுக்கு அப்பாலுள்ள சிறீலங்காப் பிரதேசங்களின் வதைமுகாம்களில் சித்திர வதை செய்யப்படுவதும் படுகொலை செய்யப்படுவதுமான மனித நாகரீகமற்ற மிலேச்சத்தன நடவடிக்கைகள் அன்றாட நடை முறையாகி விட்டன.

மனித குலத்தால் வெறுக்கப்படவும் எதிர்க்கப்படவும் வேண்டியவர்களான சர்வதேச பயங்கரவாதக் கும்பல்களான அமெரிக்க ',சி.ஐ.ஏ,' இஸ்ரேலிய மொசாட், தென்னாப்பிரிக்க இனவெறி அரசு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கூலிப்பட்டாளம், இவை யாவும் சிறீலங்கா நவபாசிச அரசின் இன்றைய நண்பர்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் குரல் வளையை நெரிப்பதற்குச் சிறீலங்கா அரசின் கொலைக்கரத்தைப் பலமாக்குவதற்கு அமெரிக்க ஏகாதிபதியமும் அதன் ஏவல் நாய்களும் பக்க பலமாக இருந்து வருகின்றன.

**மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்புகளில்** மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அணுகுண்டு அரக்கனான ஏகாதிபத்திய அமெரிக்காவும் அதன் இராணுவ கூட்டாளிகளும் இலங்கைத் தீவைத் தமது ஏகாதிபத்திய



**மனிதகுல விரோத** போருக்கான தளங்களில் முக்கியமான தொன்றாகக் கருதுவதால் ஈழப்போராட்டத்தை ஒடுக்கி விடும் படுகொலை நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்துவருகின்றன.

இலங்கையில் இன்று தேசிய இன முரண்பாடு கூர்மையடைந்துள்ள நிலையில் சிறீலங்கா மக்களிடம் தேசிய வெறியை மூட்டி இந்தியா மீதான அவதூறுப் பிரச்சாரத்தைக் கட்ட விழ்த்து விட்டு **சிறீலங்காவில் அமைதி பேணும் இரட்சகராக** வேஷமிட்டு அமெரிக்கா தனது கொலைப் பட்டாளத்தை யுத்தக் கப்பலொன்றில் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்திவைத்துள்ளது. இது தவிர தென்னாபிரிக்க இனவெறி அரசுமூலம் அமெரிக்காவானது படுகொலை ஆயுதங்களை சிறீலங்காவுக்கு அனுப்பியுள்ளது.

எனவே அணுசக்தியைக் கையில் வைத்துக்கொண்டு உலக சோசலிச நாடுகளையும், சனநாயக அரசுகளையும், தேசவிடுதலை இயக்கங்களையும் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொடிய ஏகாதிபத்திய அமெரிக்காவையும் அதன் கொலைகாரக் கூட்டாளிகளையும் ஈழமக்கள் எதிர்த்துப் போராட வேண்டியவர்களாகியுள்ளார்கள்.

இந்த நிலையில் புரட்சிகர ஈழ விடுதலைப் போராட்டமும் இப்போராட்டத்தை முன்னெடுக்கும் ஸ்தாபனங்களும் மிகப் பெரிய பொறுப்புகளைத் தமது தோள்களில் தாங்கிச் செல்ல வேண்டியவர்களாகிறார்கள்.

**நாம் பகைவர் மீது மேற்கொள்ளும் புரட்சிகரப் பலாத்கார நடவடிக்கைகள் மிகுந்த கவனத்துடனும், நிதானத்துடனும் அமைந்தவையாக இருக்க வேண்டும், விளம்பர நோக்கங்களை மட்டுமே கருத்தில் கொண்டு தொடுக்கப்படும் தாக்குதல்களானது எமது மக்களின் அழிவுக்கே இட்டுச் செல்லுமென்பதை இன்றைய யதார்த்த நிலைகள் நிரூபிக்கின்றன. அது மாத்திரமல்ல ஆயுதப் போராட்டத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படவும் இயக்கங்களை மக்களிட**

**மிருந்து அந்நியப்படுத்திக் கொள்ளவுமே இப்படியான செயற்பாடுகள் வழிவகுக்கும் என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.**

ஈழ தேசத்தின் விடுதலைக்காகவும், சனநாயகத்துக்காகவும் போராடுகின்ற, மக்கள் பிரிவுகள் அனைத்தையும் அணிதிரட்டுவது இன்றைய காலகட்டத்தின் அவசியத் தேவையென்பதை **ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி** ஆரம்பம் முதலே உறுதியாகக் கூறிவருகிறது. இவ்வடிப்படையில் சகல தேச பக்த சக்திகளையும், அணிதிரட்டுவதற்கான வெகுசன ஸ்தாபனங்களையும் எமது முன்னணியில் தலைமையின் கீழ் கட்டியெழுப்பியுள்ளோம். இது தவிர ஈழ விடுதலைக்குப் போராடும் ஏனைய இயக்கங்களுடன் ஐக்கியம், விமர்சனம், சுதந்திரம் என்ற அடிப்படையில் ஐக்கிய முன்னணியை உருவாக்கிச் செயற்பட்டு வருகிறோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியவற்றுடன் நாம் கட்டியமைத்துள்ள ஐக்கிய முன்னணியானது வலுப் பெற்று வரும் இன்றைய வேளையில் தேச விடுதலையில் அக்கறை கொண்ட ஏனைய இயக்கங்களும் ஐக்கிய முன்னணியுடன் இணைவதால் மட்டுமே விடுதலைக்கான தமது பங்கை காத்திரமானதாக்க முடியும்.

**ஐக்கிய முன்னணிக்குள் இருக்கும் ஒவ்வொரு இயக்கத்துக்கும் ஐக்கிய முன்னணியை பாதிக்காத விதத்தில் முன்முயற்சி எடுத்து செயல்படவும், விமர்சிக்கவும், தமது அணிகளையும், இராணுவப் பிரிவுகளையும் வலுவாக்கிக் கொள்ளவும் உரிமையுண்டு.**

ஐக்கிய முன்னணிக்குள் இணைந்து விடுவதன் மூலம் கைகள் கட்டுண்டு போயவிடுமென்றோ, தமது கொள்கைகள் சிதைந்து சின்னாபின்னமாகிப் போய்விடுமென்றோ யாரும் பயப்படத்தேவையில்லை.



**நாமெல்லோரும் ஈழ தேசத்தில் மக்களுக்கான சனநாயகத்தை உருவாக்குவதில் உறுதியுடன் இருக்கிறோம். மக்களுக்கான சனநாயகத்தை உருவாக்க விரும்பும் நாம் ஐக்கிய முன்னணிக்குள்ளும் பெரும்பான்மைகளின் கருத்துகளுக்கும் ஏகோபித்த முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு செயற்படுவோமென்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது.**

ஆயிரக்கணக்கான ஈழத்து மக்கள் குருதி சிந்திய பின்னும் பலநூறு போராளிகளை பகைவர்களிடம் பறிகொடுத்த பின்னும் எமது நகரங்கள், கிராமங்கள் சிதைக்கப்பட்ட பின்னும் நவீனமயப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணை சுற்றி வளைந்துள்ள நிலையில் நாம் ஒன்றுபட்டு எமது அணிகளை எதிரிகளின் இலக்குகளை நோக்கி முன்னேற்ற வேண்டும்.

ஐக்கியப்படுவோம், முன்னேறுவோம்

போராடுவோம், வெற்றி பெறுவோம்

## தேசிய ஜனநாயக சக்திகளை ஒன்றுதிரட்டி பொது எதிரியைத் தோற்கடிப்போம்

ஒரு வருட காலமாக பாசிஸ்ட் ஜே. ஆர். ஜயவர்த்தனாவினால் நடாத்தப்பட்டு வந்த வட்டமேசை மாநாடு, பேச்சு வார்த்தை என்ற நாடகங்கள் முடிவுக்கு வந்துள்ளன. பிரதேச சுயாட்சி, மாவட்ட சுயாட்சி, மாகாண சுயாட்சி என்று எவ்வளவோ பசப்பு வார்த்தைகள் பேசப்பட்டு இறுதியில் பாசிஸ்ட் ஜே. ஆர். ஜயவர்த்தனா ''தான் எடுப்பதே முடிவு என்றும் அதைச் சகலரும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்'' என்றும் திமிர்த்தனமாகப் பேசியுள்ளான்.

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி* ஆரம்பம் முதலே இப்பேச்சுவார்த்தையின் உண்மைச் சொரூபத்தை அடிக்கடி வெளிப்படுத்தி வந்துள்ளதுடன், இது ஜே. ஆர். ஜயவர்த்தனா தனது இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கும், நவீனமயப்படுத்துவதற்குமான தாமதப்படுத்தும் தந்திரோபாயமே என்றும் கூறிவந்தது. கடந்த ஒரு வருட காலப் பேச்சுவார்த்தையை நாங்கள் பார்த்தோமாயின் எந்த விதமான, உபயோககரமான அரசியல் தீர்வும் ஏற்படாமல் பேச்சு வார்த்தை முடியும் நிலைக்கு வந்துள்ளது. அத்துடன் இக்காலப் பகுதியில் அதி நவீன ஆயுதங்கள் வாங்கிக்குவிக்கப்பட்டுள்ளதுடன்,



இஸ்ரேலிய மொசாத், பிரிட்டிஷ் கூலிப் படை, அமெரிக்காவின் உதவி ஆகியவற்றைக் கொண்டு சிறீலங்கா இராணுவமும் தன்னை மேலும் நவீன உத்திகளைக் கையாளக் கூடிய வகையில் தயார்படுத்திக் கொண்டுள்ளது.

இதே சமயம் ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்னுமொரு கருத்தையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் சொல்லி வருகின்றான். அதாவது இந்தியத் தேர்தல் முடிந்ததும் இந்தியப் பிரதமர் ''பயங்கரவாதிகளுக்கு'' கொடுக்கும் ஆதரவை நிறுத்தி விடுவார் என்பது போன்ற கருத்தையும் கூறி வருகிறான். ஆனால் இந்தியப் பாராளுமன்றத்திலாயினும் சரி அதற்கு வெளியிலாயினும் சரி மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி காந்தி அவர்கள் பேசும்போது ''பயங்கரவாதிகளுக்கு'' ஆதரவு கொடுப்பது என்பதை முழுமையாக மறுத்ததுடன், இலங்கைத் தீவில் இருக்கக் கூடிய தமிழ் பேசும் மக்கள் சிறீலங்கா அரசாலும், அதன் கூலிப்படையாலும் மிலேச்சத்தனமாகச் சுட்டுக் கொல்லப்படுவதை—அழித்தொழிக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்தும் இலங்கையில் நடக்கும் பிரச்சனையை நாம் மனிதாபிமானத்தின் அடிப்படையிலேயே பார்க்கவேண்டுமென்றும், ஒரு இனம் அழித்தொழிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஆனால் சிறீலங்கா அரசானது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இராணுவத்தளம் உட்பட முழு ஆதரவையும் நல்கிவருவதுடன் சர்வதேச பயங்கரவாதிகளான இஸ்ரேலிய மொசாத், பிரிட்டனின் கூலிப்பட்டாளம் போன்றவற்றையும் தனது மண்ணில் நிறுத்தி வைத்துள்ளது. இது ஈழ விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க மாத்திரமல்லாமல் இந்தியாவை மிரட்டுவதற்குமான ஒருஏற்பாடு என்பதை இந்திய அரசு தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கும் என்றே நம்புகின்றோம். பாகிஸ்தான், சீனா, பங்

களா தேஷ், நேபாளம் போன்ற நாடுகளைத்தனது கைப் பொம்மையாக்கி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், சிறீலங்காவையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் இந்தியாவை அச்சுறுத்த முனைகிறது. இதற்குத் தரகு முதலாளித்துவ சிங்கள நிலபிரபுத்துவ அரசின் பிரதிநிதியான ஜே.ஆர் ஜயவர்த்தனாவும் அவனது அரசாங்கமும் முண்டு கொடுத்து வருகிறார்கள். இதன் மூலம் இந்தியாவிற்கு மாத்திரமல்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கே பெரும் ஆபத்து வந்துள்ளது. இதை மூடி மறைக்கின்ற முயற்சியாகவே ஜே. ஆர் ஜயவர்த்தனாவும், அவனது அமைச்சரவைக் கூட்டாளிகளும் இந்தியா மீது அவதூறுகளையும், தப்பபிப்பிராயங்களையும் சர்வதேச ரீதியாகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

இதுவரை காலமும வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ் கூட்டணியனாலும் சரி, ''நாங்களும் மாக்சிஸ்டுகள்'' என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்ட குழுக்களானாலும் சரி எமது போராட்டமானது வெறுமனேசிறீலங்கா அரசுக்கு எதிரான போராட்டம் மாத்திரமல்ல ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமும் கூட என்பதை உணர்ந்திருப்பார்கள். வெறும் **கெரில்லாப் போராட்டத்தை மக்கள் போராட்டம் என்று கூறுபவர்களும்** சரி மக்களைப் பார்வையாளர்களாக மாத்திரமல்லாமல் விடுதலைப் போராட்டத்தில் பங்காளிகள் ஆக மாற்றுவதற்கு நாம் முன்னெடுத்த சிறுசிறு போராட்டங்களைக் கொச்சைப்படுத்தி, கிண்டல் செய்த குழுக்களாயினும் சரி மக்கள் போராட்டத்தின் அவசியத்தையும் அவர்களை அணிதிரட்டி அமைப்பு ரீதியாகப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறோம். சிறீலங்கா நவபாசிசத்திற்கும் அதன் எஜமானத்துவமான ஏகாதிபத்தியத்திற்கு மெதிரான எமது போராட்டத்துக்கு முற்போக்கு ஜன



நாயக சக்திகளும் **உலக சோசலிச முகாமும் தான் உறுதுணையாக இருக்க முடியும்** என்பதையும் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

எமது எதிரி தற்காலிகமாக வேனும் இன்று மிகவும் பலமாக உள்ளான். இவனுக்கெதிராக நாம் குழுக்குழுவாகப் பிரிந்து நின்று போராடுவது என்பது எமது மக்களின் அழிவிற்கே இட்டுச் செல்லும் என்பதை நாம் உணர வேண்டும். எனவே குறைந்தது ஈழம் என்கிற ஒரே அடிப்படையிலாவது இயக்கங்கள் யாவும் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வேண்டுகோளாகும். இது எமது வேண்டுகோள் மாத்திரமல்ல; பரந்துபட்ட ஈழ மக்களின் வேண்டுகோளும் இதுவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஈழப் புரட்சியமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம் போன்ற இயக்கங்களுடன் இணைந்து ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் போன்றவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இந்த ஐக்கிய முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. ஏனைய குழுக்களுடன் பேசுவது சம்பந்தமாகவும் ஆலோசித்து வருகிறது. சகல இயக்கங்களும் குறைந்த பட்ச அடிப்படையிலாவது இணைய வேண்டுமென்பதில் மிகவும் உறுதியாய் உள்ளது.

சிறீலங்கா நவபாசிசம், ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம்போன்றவற்றிற்கெதிரான எமது போராட்டம் முற்போக்கான போராட்டம் மாத்திரமல்ல சர்வதேசப் பாட்டாளி வர்க்க போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதியுமாகும். எனவே எமது போராட்டத்திற்கு உலக சோசலிச முகாமும் முற்போக்கும் ஜனநாயக சக்திகளும் தோள் கொடுக்கத் தயாராய் உள்ளன. இந்த நிலையில் **உறுதியான ஓர் ஐக்கியத்தை எமக்கிடையில் உருவாக்கி**

ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதே அவசியமும் அவசரமுமாகும். எமது செயலாளர் நாயகம் தோழர் **பத்மநாபா** ஒருமுறை குறிப்பிட்டது போல் ''இந்த நேரத்தில் நாம் ஒன்றுபடவில்லையானால், எமது மக்களுக்கு நாமே துரோகமிழைத்தவர்கள் ஆவோம்''

**ஒன்றுபடுவதற்காகப் போராடுவோம்.**
**போராடுவதற்காக ஒன்றுபடுவோம்.**

## ஈழப் புரட்சியின் குரல்வளையில் இஸ்ரேல்-அமெரிக்க கொலைக் கரங்கள்

1948-ல் பாலஸ்தீனக் கிராமங்களிலும், 1953-ல் லிபியாவிலும் புகுந்து சூறையாடி மக்களைக் கொன்று குவித்தோரினைக் கொண்டு 1950-ல் நிறுவப்பட்டதே **''மொசாட்''** என்னும் இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமாகும். இது அயல் நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்பு, வன்முறை தனிநபர் பயங்கரவாதம் ஆகியவற்றின் மூலம் இஸ்ரேலிய நலன்களை விஸ்தரிக்கும் நோக்குடனேயே நிறுவப்பட்டதென யூத உளவு ஸ்தாபனத்தின் முதலாவது அதிபரான இஸார் ஹாரல் தமது நினைவுக் குறிப்புகளில் கூறியுள்ளார். ''மொசாட்'' கொலை பாதகர்கள் பற்பல வழிகளில், பிறர் சந்தேகிக்க முடியாத வகையில் சாதாரண இறப்புப் போல் தோன்றும் வகையில் அபாரத் திறமையுடன் ஆட்களைத் தீர்த்துக் கட்ட கூடியவர்கள்.

1972 செப்டெம்பரில் பாரிசில், பாலஸ்தீன விடுதலை இயக்க பிரதிநிதியின் டெலிபோனுக்கு அடியில் வைக்கப் பட்டிருந்த ரேடியோக் கட்டுப்பாட்டுக் குண்டினுல் அவர் கோழைத்தனமாக கொல்லப்பட்டமை; 1972 அக்டோபரில் திரிப்போலியில் தபால் குண்டினால் பாலஸ்தீன அலுவலகக் செயலாளர் தமது கண்களை இழந்தமை; 1972-ல் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவரான அபு யூசுப்பினதும் அவரது மனைவியினதும்

கொலை; அதற்கு சில நாட்களின் பின் P.L.O வின் தலைவரான டாக்டர் பாஸில் அல்கான் பாசியின் கொலை; பெய்ரூட்டில் நடத்த யூசுப்எல் நாதியார்கமால் அத்வானின் கொலை; இத்தாலியில் நடந்த பாலஸ்தீனத் தலைவர் கமால் உசேனதும் லெபனான் பத்திரிகையாளரான நாசர் மேட்டரினதும் கொலை; P.L.O வின் உதவித் தலைவர் பாருதல் அல்தானி பாரிசில் கொலை செய்யப்பட்டமை என்பன மொசாட்டின் நாசகாரக் கொலைத் திறமைக்கும் அனுபவத்திற்குமான ஒரு சில உதாரணங்களாகும்.

இக்கொலைகளைவிட, 1968 நவம்பரில் 200 தென் யுரேனியத்துடன் ஆண்ட் வேர்ப்பிலிருந்து. ஜெனோவாவிற்குபயணம் செய்து கொண்டிருந்த கப்பலை மர்மமான முறையில் நடுக் கடலில் மறையச் செய்து பின் இஸ்ரேலியத் துறைமுகம் ஒன்றில் தோன்றச் செய்தமை போன்ற நவீன முறைக் கொள்ளைகளையும், வெளி நாடுகளில் குழிபறிப்பு வேலைகளையும் நடத்திவரும் ''மொசாட், இன்று பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த உதவுவதாகக் கூறிக் கொண்டு தனது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான அத்திவாரத்தை இலங்கையில் இட்டுள்ளது.

அதே சமயம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கொலைக்கரமான C. I. A இன்னொரு கொலைக் களத்திற்கான அத்திவாரங்களை திருகோணமலையில் இட்டுக் கொண்டிருக்கிறது. ஜெனரல் டேவிட் C.ஜோன்ஸ் இனால் தொகுக்கப்பட்ட 'தற்போதுள்ளதும், சாத்தியமானதுமான அமெரிக்க ராணுவங்கள், என்னும் படத் தொகுப்பில் திருக்கோண மலையை ஓர் அமெரிக்கத்தளமாக வர்ணித்துள்ளரர். அமெரிக்க ராணுவ அமைப்பான ''பென்டகன்'' திருகோண மலையை தனது ஊழியர்களுக்கான ஒய்வு, பொழுது போக்கு வாடகைக்கான இடமாக்கத் திட்டமிட்டுள்ளது. கோஸ்ரல் பேர்மியுடா என்ற அமெரிக்க எண்ணெய் ஸ்தாபனத்திற்கு



இத் துறைமுகத்தை சிறிலங்கா அரசு வாடகைக்கு விட இருந்ததும், பின்னர் இலங்கை மக்களின் பலத்த எதிர்ப்பினால் இதனை சிங்கப்பூர்-சுவிஸ்-ஜெர்மன் கூட்டு ஸ்தாபனத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்ததும் தெரிந்ததே. ஆனால் இதுவும் அமெரிக்காவுடன் நெருக்கமானதொடர்புள்ள கூட்டு ஸ்தாபனமாகும். டாக்கா நகரில் நடந்த தென் ஆசிய ஸ்தானிகர்களுக்கான மாநாட்டில் திருமலைத் துறை முகத்தில் அமெரிக்க ராணுவத்தளத்தை அமைக்க சாத்தியமான நிலைமைகளை உறுதி செய்ய அவர்களது வழிக்கப்பாலும் சென்று முயலுமாறு ஸ்தானிகர்கள் கேட்கப்பட்டுள்ளனர். இது வரும் நெருக்கடியை உறுதி செய்கின்றது. இதைவிட கடற்படை அதிகாரிகளுக்கு உயர்தரப்பயிற்சிகளை அளிக்கவென்று 3,50,000 டாலர் பெறுமதியான இராணுவ உதவிகளை அளிப்பது பற்றி அமெரிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது என்று ஸ்ரீலங்கா வந்த அமெரிக்க செனட்டர்களின் உயர் மட்ட தூதுக்குழு ஒன்று அறிவித்துள்ளது.

அத்துடன் சிறிலங்காவில் ''வோய்ஸ் ஒப் அமெரிக்கா''வின் 6 மிகச் சக்தி வாய்ந்த ட்ரான்ஸ் மீட்டர்கள் கொண்ட ஒலி பரப்பு நிலையத்தை முற்றாக அமெரிக்கக் கட்டுப் பாட்டிலேயே ஆரம்பிக்கத்தீர்மானித்திருப்பதும் இலங்கை கடற்பரப்புகளை ஆய்வு செய்தல் என்ற போர்வையில் இந்து சமுத்திரத்தை தனது தளமாக்குவது பற்றி ஆய்வு முயற்சிகளும் ஈழத்தை மட்டுமல்ல இந்தியா மற்றும் உலக முற்போக்கு நாடுகளின் கழுத்தைச் சுற்றி ஏகாதிபத்திய, பாசிச கொலைக்கரங்கள் படர்ந்து நெரிக்க முயற்சிப்பதன் அடையாளமாகும்.

பலம் குறைந்த நாடுகளை உதவியளித்துப் பாதுகாப்பதுபோல் தனது நவ காலனித்துவ பிடிக்குள் கொண்டு வந்து அந்நாட்டு அப்பாவி மக்களை, முற்போக்குச் சக்திகளுக்கெதிரான தனது ஜீவ மரணப் போராட்டத்தில் பகடைக் காய்களாக உருட்டி விளையாட நினைக்கும்

ஏகாதிபத்திய அரக்கனது உண்மைச் சொரூபத்தை அறிந்து அதற்கெதிராக ஈழமக்களோடு ஏனைய உலக முற்போக்குச் சக்திகளும் ஒருமித்துப் போராட முன்வர வேண்டும்.

உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளே! ஏகாதிபத்தியம், சியோனிசம், நவகாலனித்துவம் என்பவற்றிற்கெதிராக சமாதானம், ஜனநாயகம், விடுதலை என்பவற்றிற்காக விடாது போராடும் ஈழ மக்களது போராட்டக் கரங்களை பலப்படுத்துங்கள்!

**இறுதி வெற்றி மக்களுக்கே!**

# கொலைக் கும்பலும் அதிரடிப் படையும்

*தோழர் தா. பாண்டியன்*

*ஸ்ரீலங்காவைத் தனது நவ காலனித்துவப் பிடிக்குள் கொண்டு வந்து தனது ஆக்கிரமிப்பு இராணுவ வெறிக்குத் தளம் காண அமெரிக்க ஏகாதிபத்தியம் முனைந்து செயற்படுகின்றது.*

*சர்வதேச அரங்கில் தனது நண்பர்களை இனம் கண்டு பிரிட்டிஷ், தென்னாபிரிக்கா, இஸ்ரேல், சீனா போன்ற நாடுகளையும் ஸ்ரீலங்கா, பாசிஸ்டுக்கள துணைக்கழைத்துள்ளனர்.*

*இலங்கைத் தீவில் ஏகாதிபத்திய அமெரிக்காவினதும், அதன் "நேட்டோ" இராணுவக் கூட்டாளிகளதும் ஆயுதக் குவிப்பு இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இந்துமாக்கடலை யுத்த சூனியப் பிராந்தியமாக்கும் கூட்டுச் சேரா நாடுகளது கொள்கைக்கும் ஏகாதிபத்திய நுழைவு வேட்டு வைக்கிறது.*

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் துணைச் செயலாளர்* ***தோழர் தா. பாண்டியன்*** *அவர்கள் ஜனசக்தி நாளிதழில் எழுதியதை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.*

சிறீலங்கா அரசின் அழைப்பின் பேரில் இஸ்ரேலிய ரகசிய அதிரடிப் படையான "**மொசாத்**" இலங்கை இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்க வந்துள்ள செய்தியைப் படித்திருப்பீர்கள். இஸ்ரேலினுடைய இந்த அதிரடிப் படை கொலை, கொள்ளை, திடீர்த் தாக்குதல், நாச வேலை, கோட்டைக்குள் குத்து வெட்டுக்கு ஏற்பாடு செய்தல்போன்ற பல திருவிளையாடல்களில் பயிற்சிபெற்றது.

40 லட்சம் யூத மக்களைக் கொண்ட இஸ்ரேல், பல கோடி அரபு மக்களைக் கொண்ட எட்டு நாடுகளுக்கும் நடுவில் அமைந்துள்ளது. நடுவில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவி போல தோன்றினாலும் பாறையை உடைக்கத் திணிக்கப்பட்ட உளி மாதிரி அது புகுந்துள்ளது.

அதுதன் நாட்டைவிட அதிக மக்கள் தொகை, நிலப் பரப்புடைய எகிப்தைத் தாக்கி நாசப் படுத்தியதை உலகு அறியும்.

ஈராக் கட்டிமுடித்த அணுமின் நிலையத்தைக் குண்டு போட்டு அழித்து விட்டு உலகக் கண்டனத்தையும் பொருட்படுத்தாது, ஆணவத்துடன் அப்படித்தான் செய்வேன் என்று கொக்கரித்த கதையையும் உலகறியும்.

அண்டை நாடான லெபனானுக்குள் நுழைந்து அது செய்து வரும் அட்டகாசங்களை ஐக்கிய நாடுகள்சபையே கண்டித்தும் பயனில்லை

**இஸ்ரேலிலுள்ள யூத அரசு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தத்துப் பிள்ளை.**

இரண்டாம் உலகப் போர் முடிந்த நிலையில் பாலஸ்தீனியர்கள் வாழ்ந்து வந்த அதே நாட்டில் உலகின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்த யூதர்களைக் கொண்டு போய் அமெரிக்க ஏகாதிபத்தியம் குடி ஏற்றியது.

மகாத்மா காந்தி அடிகள் யூத மக்களுக்கு ஒரு நாடு தரவேண்டும் என்ற உண்மையான நோக்கம் அமெரிக்



காவுக்கு இருந்தால், அமெரிக்க கண்டத்தில் ஏதாவது ஒரு மாநிலத்தை (மக்கள் இல்லாத அல்லது மக்கள் குறைவாக உள்ள இடத்தில்) ஒதுக்குமாறு வேண்டினார். மாறாகப் பாலஸ்தீனிய மக்கள் வாழும் நாட்டில் அதுவும் வளமற்ற பூமியில் இவர்களையும் கொண்டு போய்க் குடியேற்றினால் பகை வளரும், சண்டை தொடரும், மீண்டும் யூத மக்கள் பலியாகக் கூடும். எனவே பாலஸ்தீனத்தில் குடியேற்றாதீர்கள் என வேண்டினார்.

உப தேசங்களைக் கேட்குமா ஏகாதிபத்தியம் பாலஸ்தீன மக்கள் தலையிலேயே கொண்டுபோய் யூத மக்களைக் குடியேற்றியது. விளைவு, புகுந்தவர்கள் இருந்தவர்களைத் துரத்தினர். கொன்றும் அழித்தனர், யூதர்கள் குடியேறப் போன நேரத்தில் 25 லட்சம் பாலஸ்தீனியர்கள் அங்கு இருந்தனர். இப்பொழுது, 3 லட்சம் பேர் தான் உள்ளனர். 20 லட்சமாக குடியேறிய யூதர்கள் 41 லட்சமாக வளர்ந்துள்ளனர்.

எனவே இஸ்ரேல் என்னும் நாடே பாலஸ்தீனியர்களின் கல்லறை மீது எழுப்பப்பட்ட பாவச்சின்னம்தான்.

அரபுநாடுகளில் உள்ள எண்ணெய் வளத்தைச்சுரண்ட அரபு நாடுகளை அச்சுறுத்த காவலுக்காக இஸ்ரேலை உண்டாக்கியது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

அதற்காக நாசகார ஆயுதங்கள், பண உதவி, பின் பலம் என அமெரிக்க ஏகாதிபத்தியம் சகல காரியங்களையும் செய்கிறது. இத்தகைய சதி வேலைகளைச் செய்து பழகி விட்ட இஸ்ரேலின் அதிரடிப் படை இப்பொழுது இலங்கைக்கு வந்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆசியாவில் அதற்கு எடுபிடி காவலர்களாக, பார்மோசா, தென்கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் போன்ற நாடுகளை வைத்துள்ளது. இப்பொழுது இலங்கையையும் ஆக்கி விட்டது.

**இலங்கைக்கு இராணுவப் பயிற்சி கொடுக்க 'மொசாத்' வந்துள்ளது, இது தன் சதிவேலையைத் தமிழ்நாட்டிலும் செய்யும்.**

**இலங்கையில் அதிரடிப் படைப் பயிற்சி தரப்படும் தமிழ் நாட்டுக்குள் சதி, பிளவு, வேலைகள் நடக்கும் ''மொசாத்''** என்ற இந்த அதிரடிப் படை அமெரிக்க தூது வராலயத்தில் ஒரு பகுதியில் தன் தலைமையகத்தை வைத்துக் கொண்டுள்ளது.

இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்காமலே இருந்த இலங்கை இப்பொழுது இராணுவ ஒத்துழைப்புக்கே தயாராகி விட்டது. இதுவும் போதாதென்று அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனத்தின் உதவியும் வேண்டும் எனக் கேட்டுள்ளதாம் இலங்கை.

இஸ்ரேலின் ''மொசாத்'' அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சி. ஐ. ஏ., இங்கிலாந்தின் கொலைக் கும்பல் ஆகியவற்றின் உதவியுடன் ஈழத்துத் தமிழரை அடக்க, ஒடுக்க, ஒழிக்க சிறீலங்கா புறப்பட்டுள்ளது.

இது வெறும் சிங்கள, தமிழ் இனச் சண்டை மட்டுமல்ல. இனப் பிரிவைப் பயன்படுத்தி, அதையே வெறியாக்கி, அதனால் சண்டையுண்டாக்கி, அவ்வேளையில் நுழைவதே ஏகாதிபத்தியத்தின் கலை.

*சிறீலங்காவில் இந்த பூதங்கள் நுழைவது ஏன் ?*

*இந்தியாவிலிருந்து டீகோகார்சியா 640 கி. மீ. தூரத்தில் உள்ளது. இந்தியாவுக்கு நெருக்கமாக இலங்கை தேவைப்படுகிறது.*

*ஏவுகணைகளை அமெரிக்காவிலிருந்து வெடித்தாலும்,* **சோவியத் யூனியன் மீது விழும் என்றாலும், 4 நிமிடங்களில் தாக்கிட, சோவியத் எல்லையோரம் கொண்டுபோய்க் குவிப்பதைப் போல், நம் நாட்டைச் சுற்றியும், உள்ளும் தளம்**



**காணகளம் அமைக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.**

ஈழத்துத் தமிழருக்காக அனுதாபம் காட்டுவோர் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற எதிரியை இனங்கண்டு எதிர்க்கத் தயாரானால்தான் இலங்கை மக்களும் இந்திய மக்களும தப்ப முடியும்.

சிறீலங்கா தன் நண்பர்களை அடையாளம் கண்டு அழைத்துள்ளது. நாம் மக்களுக்கு நம் நண்பனையும், நம் எதிரியையும், அடையாளம் காட்ட வேண்டாமா ? இனியும் வீணாக்கக் காலம் இடம் தராது.

**ஏகாதிபத்தியத்தை முறியடிக்க முடியும், நம் நாட்டு மக்கள் திரண்டெழுந்தால்...நமது நம்பிக்கைக்குரிய நண்பன் சோவியத் யூனியனும் சோஷலிச முகாமும் என்பதைத் தெரிந்து கொண்டால்.........**

ஈழ முழக்கம்,
அக்டோபர், நவம்பர் 1984

## போராட்ட வரலாற்றில் புதிய நன்நம்பிக்கை முனை

**பேச்சு வார்த்தை, வட்ட மேசை** இந்தத் திரைகளின் மறைவில் சிறீலங்கா படுகொலை அரசு ஈழ மக்களை அழித்தொழித்து ஈழத் தாயகத்தை விழுங்கிக் கொள்ள முன் தயாரிப்புகளைச் செய்து முடித்துள்ளது.

கடந்த ஜூலைக் கலவரத்தில் சிறீலங்காவின் கொலைப் பட்டாளங்களின் ஈவிரக்கமற்ற நரபலிவேட்டையில் ஈழத்து மக்கள் சிந்திய குருதியின் ஈரம் இன்னும் காய்ந்து விடவில்லை.

மீண்டும் ஆக்கிரமிப்புப் படைகள் கொலை வெறி வேட்டையை ஈழ மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டுள்ளனர்.

ஈழத்தின் பரப்புகள் எங்கும் மக்கள் சிந்திய குருதி விளிம்பு கட்டி நிற்கிறது.

நாளும், பொழுதும் நரபலி வேட்டைகள் பெருகி வருகின்றன.

ஈழம் மீது ஆக்கிரமிப்பு நடத்தும் இனவெறி அரசுக்கு சர்வதேச விடுதலைப் போராட்டங்களின் கொலைகாரனான ஏகாதிபத்திய அமெரிக்கா ராணுவப், பொருளாதார உதவிகளை வாரி வழங்குகிறது.



தேசப் பகைவர்கள் ஈழ மக்களை அழித்தொழிக்க உறுதி பூண்டுள்ளனர். இது முற்றிலும் உண்மையாகும்.

இந்நிலையில் துப்பாக்கி ஏந்திய எதிரிப் படைகளின் சுற்றி வளைப்பில் சிதைந்து கொண்டிருக்கும் ஈழ தாயகத்தை மீட்டெடுக்க உறுதி மிக்கதும், விடாப் பிடியானதுமான ஆயுதப் போராட்டத்தில் ஊன்றி நிற்க வேண்டும்.

இந் நிலையில் **ஈழ விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் இயக்கங்கள் தமக்குள் ஐக்கியப் படுவதன் மூலம் தேசப் பகைவர்களுக்கு எதிரான வலிமையைத் திரட்டிக் கொள்ள முடியும்.**

கடந்த காலங்களில் குருதி சிந்திப் பெற்ற விலை மதிப்பற்ற அனுபவங்களும், கடினமான எதிர்காலப் போராட்டத்திற்கான சூழ் நிலைகளும் ஈழ விடுதலை இயக்கங்கள் ஐக்கியப் பட வேண்டும் என்ற கருத்தை ஈழ மக்களிடையே இருந்து உதித்தெழ வைத்துள்ளன.

ஈழ விடுதலை இயக்கங்கள் ஐக்கியப்படுவதை மகிழ்வுடன் வரவேற்கவும் இவற்றின் வழிகாட்டுதலில் ஈழ விடுதலை போராட்டத்தில் பங்காளிகளாகவும் ஈழமக்கள் தயாராக இருக்கின்றனர்.

**தேசப் பகை துடைக்க ஆயுதம் ஏந்தியவர்கள், தமக்கிடையேயுள்ள பகைமையற்ற முரண்பாடுகளைத் தீர்க்க துப்பாக்கி தூக்குவது ஈழ மக்களது உறுதி குலையாத உணர்வுகளைக்கூட மழுங்கடித்து விடக் கூடும்.**

ஈழ விடுதலை இயக்கங்கள் ஐக்கியப் படுவது விடுதலை மீதான உறுதியையும் பகைவர்கள் மீதான நிச்சயமான வெற்றியையும் மேலும் உறுதி பெறச் செய்யும்.

நவ, நவீன ஆயுதங்களைக் கொண்ட எதிரிப் படைகளை நிர் மூலமாக்கும் மக்கள் ஆயுதப் போராட்டம் வெற்றியீட்டுவதற்கு ஆயுதம் ஏந்திய மக்கள் படையை காத்திரமானதாக கட்டியமைக்க வேண்டும்.

ஈழ விடுதலை இயக்கங்கள் அய்க்கியப் படுவதன் மூலம் தமது தவறுகளைக் கூட்டு விமர்சனம் மூலம் களைந்து கொண்டு விடுதலைக்கான சரியான பாதையில் ஏறுநடை போட முடியும்.

ஈழத்தின் புறச் சூழ் நிலையானது ஈழ மக்களைப் போராட்டக்களம் நோக்கி உந்தித் தள்ளுகிறது, தன்னியல் பாகக்கிளர்ந்தெழும் வெகு மக்கள் திரளை ஒழுங்கமைத்து, உருக்குறுதியான மக்கள் சக்தியை எதிரிக்கெதிராகக் கட்டியமைக்க இயக்கங்கள் ஒன்று படவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்,

***சிதறிக் கிடந்து ஈழ விடுதலை பற்றிய திட்டங்கள் தீட்டும் நேரமல்ல இது.*** மிகவும் நெருக்கடியான நிலையில் ஆக்கிரமிப்பாளனுடன் நடத்தும் ஜீவ மரணப் போராட்டத்தின் வெற்றியும். தோல்வியும் ஈழ விடுதலை இயக்கங்களின் அய்க்கியம் மீதுதான் சார்ந்து நிற்கிறது. எனவே கூட்டு உணர்வுடன், ஈழ விடுதலைக்கான சரியான வழி மார்க்கத்தை வகுத்து ஈழ மக்களை வழி நடத்திச் செல்ல ஈழ விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட வேண்டும்.

இதன் முதற் படியாகவும், ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய நன் நம்பிக்கை முனையாகவும் மூன்று இயக்கங்கள் அய்க்கியப் பட்டுள்ளன.

''***தமிழ் ஈழ விடுதலை இயக்கம்***'' (TELO)

''***ஈழப் புரட்சி அமைப்பு***'' (EROS)

''***ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***'' (EPRLF)

இந்த இயக்கங்களின் அய்க்கியம் என்பது ஈழ மக்கள் மத்தியில் எழுந்த கருத்துக்களின் பிரதிபலிப்பாகும்.

இம் மூன்று இயக்கங்களினதும் செயலதிபர்கள் பத்திரிகையாளர் மகாநாட்டில் ஒரே குரலில் பிரகடனம் செய்தனர் சிறீலங்கா அரசுக்கெதிராக ஆயுதப் போரை ஒன்று பட்டு முன்னெடுப்போம்!:



ஈழத்தின் மகத்துவமிக்க வீரமிக்க விடுதலைப் போராட்டத்தில் இந்த அய்க்கியம் மிகப்பெரும் முன்னேற்றமானதாகும். ஈழ மக்களைப் போர்க்களப் பாதைக்கு உந்தித் தள்ளும் நெம்பு கோலாகும்.

ஈழ மக்கள் மட்டுமின்றி சர்வதேசமெங்கும் வாழும் தமிழ் மக்களும், முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் இந்த ஐக்கியத்தை பெருமையுடன் வரவேற்கின்றனர்.

ஈழத்தின் ஈவிரக்கமற்ற எதிரிகளை முறியடிக்க அய்க்கியப்பட்டுள்ள மூன்று இயக்கங்களும் கூட்டாக விடுத்துள்ள புரட்சிகர அறிக்கையை இங்கே பிரசுரிக்கிறோம்.

### ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை தற்போது பெரும் இக் கட்டான நிலைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. சிறீலங்க அரசு ஈழ விடுதலை போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் அரசப் படைகளினது சகல விதமான ஒடுக்குமுறை நட வடிக்கைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

ஈழத்தின் பிரதேசங்கள் அனைத்திலும் அரசப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சிறீலங்கா வெறி பிடித்த குண்டர்களும் குவிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சிறீலங்கா அரசின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தினை ஒடுக்கும் பொருட்டு ஈழ மக்கள் மீதான அரச நிர்வாகத்தினை அரசப் படைகளின் கையில் ஒப்படைத்திருக்கிறான்.

''பயங்கர வாதிகளை ஒழித்தல்'' என்னும் பெயரில் தமிழ் பேசும் மக்களை, குறிப்பாகத் தமிழ் இளைஞர்களை அழித்தொழிக்கும் பொருட்டு சிறிலங்கா அரசின் படைகள் எந்தவிதக் கட்டுப்பாடுமற்ற முறையில் கைது செய்வதற்

கும், கொலை செய்வதற்கும் அதிகார பூர்வமாக அனுமதி யளிக்கப் பட்டுள்ளன.

சிறீலங்கா அரசின் இவ் இனப் படுகொலை நடவடிக் கைகளுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும்,அதனைச் சார்ந்த நாடுகளும் பக்க பலமாக நின்று சகல விதமான இராணு வப் பொருளாதார உதவிகளையும் செய்து வருகின்றன இவ்வாறான நிலைகளின் பின்னணியில் இனியும் தனித் தனியாக இயங்குவதை விடுத்து எமது எதிரியைத் தோற் கடிப்பதற்கும் பெரும் இக்கட்டான நிலையில் வாழும் எமது மக்களின் சுதந்திர உணர்வுகளை ஒரு முகப் படுத்து வதற்கும் சில அத்தியாவசிய நடவக்கைகைகளிலாவது நாம் இணைந்து செயற்பட வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்து தற்போது தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(TELO) ஈழப் புரட்சி அமைப்பு (EROS) ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று இயக்கங்களை யும் சேர்ந்த நாம் ஒன்று பட்டுச் செயற்படும் நிலையை உருவாக்கியுள்ளோம்.

குறைந்த பட்ச வேலைத் திட்டங்களை உருவாக்கு வதற்கான எமது அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகள்.

★ சிறீலங்காவின் ஆதிக்கத்திலிருந்து எமது தாயகத்தின் சுதந்திரத்தை வென்றெடுத்தல்.

★ ஈழ விடுதலை தவிர்ந்த வேறெந்த குறைந்தளவான சமரசத்திற்கும இடமளிப்பதில்லை.

★ எமது மக்கள் அனைவரையும் இணைத்த ஆயுதப் போராட்டத்தை எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.

★ சுதந்திர ஈழத்தில் சோஷலிச சமுதாயத்தை கட்டி யெழுப்புதல்.



★ அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவப் பிடி யிலிருந்து எமது தேசத்தை விடுவித்தல்.

—தற்போது ஒப்புக் கொள்ளப் பட்டுள்ள குறைந்த பட்ச வேலைத் திட்டங்கள்.

★ சிறீலங்கா அரச படைகளுக்கு எதிரான எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்தி செயற் படுத்துதல்.

★ வெளி நாடுகளில் பிரச்சாரங்களைக் கூட்டாக மேற் கொள்ளுதல்.

★ எமது விடுதலைப் போராட்டதிற்கு ஆதரவானதனி நபர்களிடமிருந்து பொது நிதியைத் திரட்டி அதனை ஒரு பொதுக்குழு நிர்வகித்தல்.

இத்துடன், இக்கூட்டமைப்பு மேலும் விரிவுபட்டு வலுப்பெற எமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஏனைய அனைத்து இயக்கங்களையும் ஒத்துழைப்புத் தரு மாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

செயலதிபர்

**தமிழீழ விடுதலை இயக்கம்**

புரட்சிகர நிறைவேற்றுக் குழு

**ஈழப் புரட்சியமைப்பு**

செயலதிபர்

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

***வீரமிக்க ஈழமக்களே***

வரலாற்றை உருவாக்குவது நீங்கள் தான்.

எமது மக்கள் விடுதலை யுத்தத்தில் ஆயுதங்கள் பிரதானமானவையாக இருப்பினும் வெற்றியைத் தீர்மானிக்கும் தீர்க்க சக்திகள் நீங்கள் மட்டுமே.

எமது தேசமெங்கும் குருதியைப் பரப்பி வரும் காட்டுமிராண்டித் தனமான பகைவர்களுக்கு எதிராக ஐக்கியப்பட்டுள்ள இயக்கங்களை பலமாக்குங்கள். சமாதான பூர்வமான, எழில்மிகு வாழ்வை புதிய ஈழத்தில் கட்டியமைக்க ஆயிரமாயிரமாய் அணிவகுத்து வாருங்கள். எமது அடிமைச் சங்கிலிகளை பொடியாக்கி எதிர்கால சந்ததிகளையும் மகிழ்வுடன் வாழவைக்க உறுதி ஏற்போம். **கொடுமைகள் கோடி, கோடி குவிந்து நம் எதிரேவரினும் ஐக்கியப்பட்டு நாங்கள் அனைத்தையும் பொடி செய்குவோம்.**

**இறுதி வெற்றி வரை ஓயமாட்டோம்**

**ஈழம் நீடூழி வாழ்க !**

# சோவியத் யூனியனுடன் நேச உறவு

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் தனிப்பட்ட அந்தந்த நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் தேசிய, சமுதாய, கலாச்சார சுதந்திரத்திற்காக நடத்தும்போராட்டத்திலிருந்து முரண்பட்டதல்ல என்பது மாத்திரமல்ல; சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டு ஒருமைப்பாடும் போராட்ட ஒற்றுமையும், இந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு **அவசியமான ஆதரவையும்** கொடுக்க உறுதிப்படுத்துகிறது. சர்வதேசப் பாட்டாளி வர்க்க கூட்டு ஒருமைப்பாடும் போராட்ட ஒற்றுமையும் மகத்தான சோவியத் யூனியனின் வெற்றிகரமான பாட்டாளி வர்க்கத்துடன் **நெருக்கமான நேச உறவுக்கு** உறுதி அளிக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கத்துடன் கைகோர்த்துக் கொண்டு போராடுவதன் மூலம்தான் காலனி நாட்டு மக்களும் ஒடுக்கப்பட்ட தேசிய சிறுபான்மையினர்களும் தங்கள் சுதந்திரத்தை அடைய முடியும். ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கான ஒரே பாதை ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம், காலனி நாடுகளிலும், சார்பு நாடுகளிலும் உள்ள தேசிய விடுதலை இயக்கத்துடன் புரட்சிகரமான நேச உறவு வைத்துக் கொள்வதில்தான் இருக்கிறது காரணம் **மார்க்ஸ்** போதித்திருப்பதைப் போல் 'இதர நாடுகளை ஒடுக்கும் எந்த ஒரு நாடும் தானும் சுதந்திரமாக இருக்க முடியாது.'

—*தோழர் திமித்ரோவ்*

நன்றி : *ஐக்கிய முன்னணித் தந்திரம்*

ஏ, மனிதகுல விரோதிகளே !
எமது சக்தி மாமலையிலும் வலியது.
இனிமேல்
உங்கள் கொலைக்கரங்கள்
குலுக்கப்படாது—அவை
அறுக்கப்படும்.

